திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தங்களிடம் ஒரு விளக்கம். முதலில் நான் எழுந்தபோது சபையில் பரபரப்பான நிலைமை இருந்தது. தவறி எழுந்துவிட்டேன். அதற்காக மன்னிப்புக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மன்னிப்புத் தேவை இல்லை. உங்கள் பெயரே கந்தசாமி. ஆகவேதான் பழனியைப்பற்றி கேள்வி கேளுங்கள் என்கிறேன்.

(2) தகவல் கோரல்
பேரவை கூடும் நேரம் குத்றிது.

திரு. கே. கந்தசாமி : தலைவர் அவர்களே, நேற்றைய செய்தித் தாளில் சட்டமன்றம் இனிமேல் மாலை நேரத்தில் நடக்கவிருக்கிறது என்று தாங்கள் அறிவித்திருப்பதாக அறிகிறேன். இதுபற்றி நான் சில விஷயங்களைத் தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சபையின் அங்கத்தினர்களின் எண்ணிக்கை அதிகம். உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்ல அவசியமும் இருக்கிறது. இப்பொழுது காலை நேரத்தில் சபை இருந்துவருவதால், சட்டசபை நடவடிக்கைகளைக் கவனித்த பின்னர், அரசு அதிகாரிகளைப் பார்த்துப் பேசுவதற்கும், மற்ற அலுவல்கள் காரணமாக அதிகாரிகளைச் சந்திப்பதற்கும் சுலபமாக இருக்கிறது. காலை நேரத்தில் சபை இருப்பதால் அங்கத்தினர்களுக்கு சௌகரியங்கள் அதிகம் இருக்கின்றன. ஆகவே, சபையை வழக்கம்போல் காலை நேரத்திலேயே வைத்தால் நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது சட்டப் பேரவை காலையில்தான் நடக்கிறது. நேற்றைய தினம் கல்வி–உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையையும் மாலை நேரத்திலே வைக்கலாமா என்பதைப்பற்றி மேலவையிலே கூறியிருக்கிறார். இது இன்னும் ஆலோசனையிலேதான் இருக்கிறது. எந்தவிதமான முடிவும் எடுக்கப்படவில்லை. சட்டப் பேரவையின் நிகழ்ச்சி நேரம் இப்போது மாற்றப்படவில்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(3) கவன ஈர்ப்பு

வாழ்க்கைச் செலவு குறியீட்டு எண் சரிவும் அகவிலைப்படி குறைப்பும் அதனுல் ஏற்பட்ட பதட்ட நிலையும்.

DR. H. V. HANDE : Sir, I wish to call the attention of the Hon. Minister for Labour to a matter of urgent public importance, namely, "the reduction in dearness allowance to about three lakhs of workers all over Tamil Nadu as a result of the steep fall in the cost of living index and the consequent agitation by all the Trade Unions".

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I also wish to call the attention of the Hon. Minister for Labour to a matter of urgent public importance, namely, 'the reduction of Dearness Allowances to about three lakhs of workers all over Tamil Nadu as a result of the steep fall in the cost of living index and the consequent agitation by all the Trade unions.'